பதிவுபத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

ஸ்தோத்திஸூ (1889) ஆவணி உ ஆரம்பமானது.

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஸூ 1-க்கு ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரூ. | 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கஎ. யாழ்ப்பாணம்:—குரோதனஸூ ஆனிமீ கூ0உ; (1925 ஜூலாய் 13) திங்கட்கிழமை. இலக்கம்—௪

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தந் தினிது தாங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்த விநாயகனருள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுக்கு

**ருக்மணிகுக்கர்தான்.**

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வரதராஜலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

| அளவு | ஒருவர் | 2 | 4 | 6 | 8 பேர். |
|---|---|---|---|---|---|
| விலை | ரூபா 13. | 18 | 22 | 27 | 33 |

விபர புத்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயபுரம், மதராஸ்.

(Y. 45.)

[ESTABLISHED 1809.]

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

## ஏ ஜ ண் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் — சந்தோஷிக்கச் செய்வது

உ த் த ர வா த மு ள் ள து.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய அமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

**லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து [illegible] இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காக இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபாற்செலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டிகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனதியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினலாவதுமுன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

| | |
|---|---|
| TEL. ADDRESS:— | என்மேல்விலாசம்:— |
| Khader Bros. | மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ், |
| Porto Novo. | கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை, |
| (Y. 38). | பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா. |

**Hakeem, M. Mohamed Ebraheem & Co;**
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
**POTO-NOvO (South India)**

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத் திடத்தையும் அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
மதன மோஹன

## சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

—o—

அசல் பாகம்! — அருமையானது!!

பரிசுக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினாலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

### அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையிலே நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சித்சுகவிலாச நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோஹத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆணாகப் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே குருநோய்வாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினாலும் தேஹத்திற்கு சத்தாரணமாகிய நல்லிரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினாலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், ரீத்திராபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினால் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நாம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹகாங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடகர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்யசக்தியின் குறைபாட்டினால் ஏற்பட்ட பலவிதமான நோய்களினாலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிறகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணமசெய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான என்று நாம் சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமைக் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும்.

*அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—*

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இமிட்டேஷன் லேகியங்களையே டி சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைக் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. டி முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனும்.

| | | |
|---|---|---|
| | 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 10—0—0 |
| | 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 5—0—0 |
| பரிக்ஷைக்கு | 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 3—0—0 |

வி. பி. தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணா 12ம், அரைபாகத்திற்கு அணா 7ம், கால்பாகத்திற்கு அணா 5ம் பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டிங் சார்ஜ் இனாம்.

விசேஷ கவனிப்பு:—பினாங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டால், மோரீஸ் முதலிய வெளிப்பிர தேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணமாக மணியாடர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும். நமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுறுஹீம் அண்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூனானி வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).

(Q. 63).

## ஒரு சாதாரண பொருளே.

நோவுக்கான தைலத்தில் சுகந்தம்தேடமாட்டீர். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்குங் குணம் மறைந்துவிடுகிறது.

### லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக் குணமாக்குஞ் சரக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சரக்குகள் சேர்ந்து அதி உயர்ந்த குணங்கள் வாய்ந்த தைலமே லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம். அதனால் அது உடனே கீல்வாயு, தலைக்குடைச்சல் இடுப்பு வலி, பாரிச வாய்வு வாதரோகம், மண்டையிடிப்பு, முதலிய நோவுகளைத் திடமாய்க் குணப்படுத்துகிறது

4—L—25.




(Y. 41. B.)

யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்.

பட்டின பரிபாலன சங்கத்தின்
எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக

**ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை**

(மாமாத்தம்பி)யைத்
தயவுசெய்து
தெரிவு செய்யுங்கள்.

(Q 66)

ஆறுமுக நாவலரவர்கள்
அச்சிற்பதிப்பித்த
தமிழ்ப் புத்தகங்கள்
வண்ணார்பண்ணையில்
இனி
சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார்
அவர்களிடம்
விலைக்குப் பெற்றுக்கொள்ளலாகும்.

1-6-25. ச. விசுவநாதபிள்ளை.
(Mis. 657)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன௵ ஆனிமீ ௧௫உ திங்கட்கிழமை.

## போலிஸ்பகுதியாரின் அறிக்கைப்பத்திரம் 1924.

இலங்கைப் போலிஸ்பகுதித் தலைமை உத்தியோகத்தராகிய மிஸ்ரர் H. L. டௌபிக்கன் சென்ற 1924-ம் ஆண்டிற் போலிசரின் பரிபாலனத்தைப்பற்றிய அறிக்கைப் பத்திரத்தை வெளியிட்டிருக்கின்றனர் இந்த அறிக்கைப்பத்திரத்தை உற்றுநோக்கும் போது, இலங்கையிலே குற்றங்கள் வரவர அதிகரித்துவருகின்றனவென்பது நன்கு புலப்படுகின்றது. சென்ற 1924-ம் ஆண்டில் இலங்கையில் நடந்த கொலைகளின் தொகை 217. கொலையுண்டோரில் 121 பேர் கத்தியாற் குற்றியும் வெட்டியுங் கொல்லப்பட்டனர். எனவே நூற்றுக்கு 50 விகிதத்திற்கு மேற்பட்ட கொலை கத்திக் கொலையாகும். இலங்கையிலே சிங்களச் சாதியாருட் சாமானிய சனங்கள் எக்காலத்தும் கத்தியைச் சங்கிலியில் மாட்டித் தங்கள் உடையோடு வைத்திருப்பதைக் காண்கின்றேம். இவர்களுக்குச் சிறிது கோபம் மூண்டவுடனே தம்முடன் மாறுபட்டவரைக் கத்தியினாற் குற்றிவிட்டுப் பின்பே யோசிப்பார்கள். ஆனால் இங்குள்ள தமிழர்களிடத்திற் கத்தி கொண்டு திரியும் வழக்கமில்லை. இவர்களுள்ளுஞ் சிலர், சிங்களரைப் பின்பற்றிப் போலும் கத்தியைக் கொலைசெய்யும்படி உபயோகிக்கலாயினர்.

சென்ற ஆண்டில் வடமாகாணத்தில் நடந்த கொலை 11. மோசமான காயமடைந்தோர் தொகை 67 களவு 56. ஆடு மாடு முதலியவற்றின் களவு 25. மற்றுங் குற்றங்கள் 272. இவற்றைச் சிந்திக்குமிடத்து, இக்காலத்திலே குற்றங்களில் வடமாகாணம் சிங்களநாட்டிற்குக் குறையாமலிருக்கின்றது. இதற்குக் காரணம் யாதெனத் தெரியவில்லை. மதுபானமே சண்டைக்குங் கொலைக்கும் பிரதான காரணமாமென மதித்து இங்குள்ள அபிமானிகளின் பெருமுயற்சியினுல் எத்தனையோ மதுக்கடைகள் சனசம்மதம் பெற்று அகற்றப்பட்டன. இக்கடைகள் அகற்றப்பட்டாலும் சோரமான மதுவியாபாரம் இந்த மாகாணத்தில் நடைபெறுகின்றதெனத் தோற்றுகின்றது. கொலைக் குற்றங்களுஞ் சண்டைகளுங் குறையவேண்டுமேல் சோரமான மதுபான வியாபாரமுங் குறைதல்வேண்டும்.

இனி, கொலையுண்டோர் 217 பேருள் 52 பேர் பெண்களாவர் கொல்லப்பட்ட பெண்களுங் கொலைசெய்த ஆண்களும் பெரும்பான்மையும் மனைவி புருஷனென்ற முறையி லுள்ளவர்கள் பெண்கொலைசட்குக் காரணம் பெண்களின் துர்நடத்தையேயாம் பெண்களைக் கொலைசெய்தல் அதிகமாகச் சிங்களரிடத்திலும் இந்தியாவிலிருந்து வரும் கூலிச்சனங்களிடத்துமே காணப்படுகின்றது வடமாகாணத்திலே பெண்கள் கொலைசெய்யப்படாமைக்குப் பிரதான காரணம் பெண்களிடத்தில் துர்நடத்தையில்லாமையாம். துர்நடை காணப்படினும் இங்குள்ளார் "சற்றேனும் ஏறுமாறாக நடப்பாளேயாமாகிற், கூறுமற் சந்நியாசங் கொள்" என்றபடி, அவளை விட்டு விலகுவரேயன்றி வீணே கொலைசெய்து தாமும் மரணதண்டனைக்கு ஆளாகமாட்டார்.

சூதுவிளையாட்டைப்பற்றிச் சொல்லுமிடத்து மற்றும் எல்லாமாகாணங்களிலும் இச்சூது அதிகமென்றும் வடமாகாணத்தில் மாத்திரம் சூதாட்டம் மிக அற்பமென்றும் மிஸ்ரர் டௌபிக்கன் சொல்லுகின்றார். வடமாகாணத்திற் சூதாட்டம் குறைவாக விருத்தற்குக் காரணம், இம்மாகாணம் நீர்வளங் குறைந்ததாக விருத்தலினுல் இங்குள்ளார் தங்கள் சமத்தொழில் விஷயத்தில் அதிக முயற்சி யுடையவர்களாக விருக்கின்றார்களென்றும், அதனுல் இப்படிப்பட்ட தீக்கருமங்களிற் பிரவேசிக்க அவர்களுக்கு நேரமில்லையென்பதுமே மிஸ்ரர் டௌபிக்கன் சொல்லும் நியாயமாகும். மேலும் யாழ்ப்பாணத்தவர் மிகப் பாடுபட்டு ஈட்டிய பொருளைச் சூதாட்டத்தில் வீணே செலவிடப் பிரியப்படுவதில்லையென்றும் போலிஸ் தலைவர் கூறுகின்றார். அவர் கூறுவது அத்தனையும் உண்மையாகும். யாழ்ப்பாணம் நீர்வளம் நிலவளம் குறைந்து பஞ்சப்பட்ட நாடாக விருத்தலினுல் இங்குள்ளார் "பறக்கிற காகம் இருக்கிற கொப்பு அறியா" தென்றபடி சஞ்சீவியத்தை நடாத்துவதற்கான முயற்சியிலேயே இடையீடின்றி ஈடுபட்டிருக்கின்றார்கள். இங்கு யாரேனுஞ் சூதாவேரேல் அது பணமின்றிப் பொழுதுபோக்குக்காகவேயாம். ஆனால் அதனையும் விடுத்து "அவப்பொழுதிலும் தவப்பொழுது" என்றுங்கு பொழுதுபோக்காக நல்ல புத்தகங்களைப் படிப்பதனுல் அதிக நன்மையுண்டாம்.

போலிஸ்பகுதித் தலைமைஉத்தியோகத்தர் இங்குள்ள சில தலைமை உத்தியோகத்தர்களின் திறமையைப்பற்றிக் கூறியிருக்கின்றார். அதனையும் இங்கே கூறுவது மிகையாகாது வலிகாமம் மேற்கு மணியகாரன் மிஸ்ரர் J. N. சந்திரசேகரமவர்கள் ஊரிலுள்ள குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிற் போலிசருக்கு அதிக துணையாக நின்றுள்ளனர். சுன்னுகம் பருத்தித்துறை புலோலிதெற்கு கரவெட்டிமேற்கு இரணைமடு என்னும் பிரிவுகளுக்குரிய விதானைமாரும் தங்கள் பிரிவுகளிலுள்ள குற்றங்களைக்கண்டுபிடிப்பதிற் பெருந்துணையாக நின்றுள்ளனர். யாழ்ப்பாணச் சோனகதெருவில் விதானையாகிய மிஸ்ரர் அப்துல்காதர், நல்லூர் விதானையாகிய ஸ்ரீ சந்தையா என்னுமிருவரும் போலிசருக்குப் பெருந் துணையாக நின்று குற்றவாளிகளை அகப்படுத்தினர் புங்குடுதீவு மேற்கு உடையாராகிய ஸ்ரீ A. சரவணமுத்து என்பவர் ஒரு களவைக் கண்டுபிடித்தமையைப்பற்றிப் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது. சென்ற ஆக்கஸ்ட் மாசம் மேற்படி உடையாருடைய பிரிவிலே வசித்த கந்தையாவென்னு மொருவன் தான் முன்னொரு போதும் வைத்திராத சில பொருள்களை வைத்திருப்பதை உடையார் அறிந்தார். இந்தப் பொருள்களுள் பல உடைகளாகும். இவன்மீது உடையார் சந்தேகங் கொண்டு இவனைப் பிடித்துச் சிறைப்படுத்துவித்தார். பின்னர் விசாரணை செய்தபோது இந்தப் பொருள்கள் யாழ்ப்பாணப் பட்டினத்துள்ள ஒரு வீட்டிற் களவாண்ட பொருள்களென்றும், இவற்றைக் கந்தையாவென்பவன் திருடி, புங்குடுதீவில் இரகசியமாக விற்கலாமெனக் கொண்டுவந்தானென்பதும் வெளியாயின. இவன் குற்றவாளியெனக் கண்டு தண்டிக்கப்பட்டான்.

மேலே சொல்லப்பட்ட தலைமைக்காரரை இங்குள்ள ஏனைய தலைமைக்காரரும் பின்பற்றி வடமாகாணத்திற் கொலை களவு முதலிய குற்றங்கள் இல்லாதொழிந்துபோம்படி செய்வார்களாக.

## சுந்தரமூர்த்தி நாயனாரின் திருமணக் குழப்பம்.

சிவாஞ்ஞையின்வண்ணம் திருக்கயிலாயத்தை விட்டுப் புறப்பட்டு, பூமியிலுள்ள புண்ணியபூமியாகிய பரதகண்டத்திலே திருநாவலூர் ஆதிசைவர் குலத்தில் அவதரித்து, நம்பியாரூரர் என்னும் திருநாமம் இடப்பெற்று, திருமுனைப்பாடிநாட்டை அரசுபுரியும் நரசிங்கமுனையர்பால் வளரும் ஆலாலசுந்தரர் திருமணப்பருவம் எய்தப்பெற்றார். அவரது தந்தையாராகிய சடையனார் புத்தூரில் வாழும் சடங்கவிசிவாசாரியரின் அருந்தவப் புதல்வியைத் தமதுபுத்திரருக்கு விவாகஞ்செய்து கொடுப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளையெல்லாம் செய்து முடித்தார். விவாகத்துக்குரிய சுபமுகூர்த்தமும் நிச்சயிக்கப்பட்டது. சடையனார் தமது சுற்றத்தவர்களுக்கும் ஏனைய ஆதிசைவப் பிராமணர்களுக்கும் பிறருக்கும் திருமணவோலை விடுத்தனர்.

மணமகனுடைய கிருகத்திற் செய்ய வேண்டிய கருமங்களெல்லாம் எமது சமயநூல் கூறும் முறைபிறழாது நிறைவேற்றப்பட்டன. நகர வாத்தியங்கள் ஒலித்தன அரசர் அந்தணர் முதலான சைவநன்மக்கள் எல்லோரும் வந்து குழுமினர். மணமகனாகிய நம்பியாரூரர் நற்குறிகளும் நல்லிலக்கணங்களும் பொருந்திய யோகப்புரவிமீது ஆரோகணித்தனர். நரசிங்கமுனையரென்னும் அரசன் தனது அபிமான புத்திரரென்னும் முறைமைபற்றித் தனக்குரிய இராசவரிசைகளையெல்லாம் அவருக்குக் கொடுத்துச் சம்மானித்தான். இராசவைபவமும் அந்தணர் வைபவமும் பொலிந்து விளங்கும் மணமகன் குடை நிழற்றவும், சாமரம் இரட்டவும், கொடிகளசையவும் புத்தூரையடைந்து சடங்கவிசிவாசாரியருடையகிருகத்துள்ள மணப்பந்தரில் அமைக்கப்பெற்ற உன்னத பீடத்தில் எழுந்தருளியிருந்தார்.

எங்குமாய் எல்லாமாய் எவற்றையும் அறியும் பரம்பொருளாகிய சிவபெருமான் முன்னர்த் திருக்கயிலாயத்திலே ஆலாலசுந்தரருக்குத் திருவாய்மலர்ந்தருளிய பிரகாரம் அவரைத் தடுத்தாட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டார். எமது ஆன்மரக்ஷகர் உச்சியில் முடித்த வெள்ளிய நரைமுடியும் மார்பிற் பூணூலும் ஒரு கரத்திற் குடையும் ஒரு கரத்தில் மூங்கிற்றண்டுமுடைய ஒரு கிழப்பிராமணத் திருமேனி தாங்கி அங்கு எழுந்தருளினார்.

"தந்தைதாய் தம்மகவைத் தம்வழியிலிருத்தத் தளையிட்டும் அடித்தும் அவர்தங் கண்ணினோய்க்கு, முந்தவே பொருளுமீந்து உரிப்பிக்கு நெறியும் முடிமன்னன் தன்மகவைத் தானூர்ந்த முறையும், அந்தவர்கள் செயலெல்லாம் கருணையாகும் அப்புதல்வர்க்குத் துக்கம்போலப் பின்சுகமாம், இந்தவகை சிவன்றன்னை யறிவளவுமெல்லாக் கன்மமுஞ் செய்வித்தகற்றியின் பாக்கிவிடுமே".

என்றபடி பெற்றோர் பிள்ளைகளை நல்வழிப் படுத்தவேண்டி விலங்கிடுவர்; தண்டிப்பர்; கண்களிலுண்டான நோயைத் தீர்க்கும் பொருட்டுப் பணமும் செலவிட்டுப் பிள்ளைகள் வருந்தும்படியாகக் கண்களையும் உரிப்பிப்பர். இச்செயல்கள் ஆரம்பத்தில் அப்புதல்வர்க்கு அதிக துயரைக் கொடுப்பதாயினும் ஈற்றில் பெரு நன்மை பயப்பனவாம். அவ்வண்ணமாகவே எம்மை ஈடேற்றவேண்டுமென்னும் பெருங்கருணையுடையவராகிய சிவபிரான் நாம் மீளா அடிமையாகிப் பெருவாழ்வுறும்வரைக்கும் முன் செய்துள்ள வினைகளாலாகிய கன்மங்களை எமக்கு ஊட்டி அவை வாயிலாக எம்மை ஈடேற்றுவர்.

எனவே நம்பியாரூரர் பிரபஞ்சவாழ்க்கையிற் சிக்குண்டு மயங்காவண்ணம் அவரைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டுச் சிவபிரான் தள்ளாத கிழப்பிராமண வேடந் தாங்கிச் சடங்கவிசிவாசாரியரது கிருகத்திலுள்ள மணப்பந்தரினுட் பிரவேசித்தார். அவர் "அறிவிற் சிறந்த ஆதிசைவப் பிராமணர்களே! இந்தச் சபையில் யான் கூறும் மாற்றமொன்றுளது. அதனைக் கேளுங்கள்" என்றார். அது கேட்ட பிராமணர்கள் "வயதினாலும் அறிவினாலும் மிகுந்த பெரியவரே! தாங்கள் இங்கு எழுந்தருளியமையினால் நாங்கள் புனிதரானோம்; இப்பொழுது தாங்கள் பேசவேண்டிய விஷயத்தைக் கூறுங்கள்" என்றனர். விருத்த வேதியர் மணமகனைப் பார்த்து "அப்பா, எனக்கும் உனக்கும் இடையிலுள்ள தொடர்பு பண்டுதொட்டுளது. அத்தொடர்புபற்றி ஓர் தீராவழக்கிருக்கிறது. அதனைத் தீர்த்துக் கொண்டன்றி நீ விவாகஞ் செய்யவொண்ணாது" என்றார். இந்த வார்த்தையைக் கேட்ட மணமகன் "தவசிரேஷ்டரே! உமக்கும் எனக்குமிடையில் ஓர் வழக்குப் பண்டுதொட்டிருப்பதாயின் அதனைத் தீர்த்தபின்னரே யான் இல்லாச்சிரமப் பிரவேசஞ் செய்வேன்; ஆனால் அந்த வழக்கை இப்பொழுதே கூறுதிர்" என்றார். வயோதிபர் அவர்களை நோக்கி "இந்த நம்பியாரூரனென்னும் மணமகன் எனது அடிமையாவன்" என்றார். இந்த அபூர்வமான விஷயத்தைக் கேட்டோர் திகைத்தனர்; சிலர் இக்கிழ மறையவர் யாரெனப் பார்க்கும்பொருட்டுச் சமீபத்திற் சென்றனர்; சிலர் வெருண்டனர்; சிலர் சிந்தித்தனர்; சிலர் வியப்புற்றனர்; சிலர் சிரித்தனர். நம்பியாரூரர் சிரிப்பும் கோபமும் வியப்புமுடையாராய் அவரை நேரே நோக்கினார். அந்தண முதியோர் சிறிதுகோபங்கொண்டவர்போலாகி "அக்காலத்தில் உனது பாட்டன் எனக்கு அடிமைச்சீட்டு எழுதிக் கொடுத்து அன்றுமுதலாக அடிமைபூண்டுள்ளவன்; அந்த அடிமைச்சீட்டும் என்னிடத்துளது. அங்ஙனமெல்லாமிருப்ப உன் எசமானாகிய என்னைச் சிறிதும் மதியாது எனது வார்த்தையையும் இகழ்ந்து சிரித்தமைக்குக்காரணம் யா" தென்றார். நம்பியாரூரருக்குச் சிறிது கோபம் மூண்டது. "வயோதிகரே! பிராமணர் பிராமணருக்கு அடிமையாவதை இன்று நீரே சொல்லக் கேட்டேன்; நீர் பித்தரா?" எனக் கடுகடுத்துக் கூறினர். "நான் பித்தனானாலும் ஆகுக; பேயனானாலுமாகுக; எத்தனை வசை மொழிகளை நீ சொன்னாலும் நான் அவற்றால் நாணமுறமாட்டேன். என்னையாரென்று நீ இன்னமும் அறிந்துகொள்ளவில்லை. பரிகாசவார்த்தை பேசுவதனாலாகும் பயன் யாதுமில்லை. தாமதமின்றி அடிமைத்தொண்டு செய்யவருகுதி" என வேதியர் கூறினார். இதனைக் கேட்ட நம்பியாரூரருடைய உள்ளங் கலங்கியது. அவர் "ஐயரே! இப்படியான ஒரு விஷயத்தை யான் இதுகாறுங் கண்டுங் கேட்டுமறியேன். எனது பாட்டனெழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டொன்று இருக்கிறதாகச் சொல்லுகின்றீர்; அதனை இப்பொழுது காட்டும் பார்ப்போ" மென்றார்.

சிவபெருமானாகிய பிராமணர் அவரை நோக்கி "உனது பாட்டன் எழுதிக் கொடுத்த அடிமை ஓலையை நீ பார்த்து நிச்சயிக்கத்தக்கவனல்லை. இந்தச் சபையில் அதனைக் காட்டிச் சபையார் அங்கீகரித்த பின் அடிமை வேலை செய்வதற்கு மாத்திரம் நீ உரியை" யென்றார். நம்பியாரூரர் கோபங்கொண்டு அவர்பால் விரைந்து ஓடினார். வேதியர் அஞ்சினார்போன்று ஓட முயன்றார். நான் பிரமமென அகங்கரித்தெழுந்த பிரமா விட்டுணு முதலியோருக்குக்கிட்டாதசிவபெருமான் தமது தொண்டனை ஆட்கொண்டருளும் பெருங்கருணையினால் அவர் கையில் அகப்பட்டார். நம்பியாரூரர் வேதியர்கையிலுள்ள அடிமைச்சீட்டை அதிகோபத்துடன் பறித்து "பிராமணர் பிராமணருக்கு அடிமையாதல் எம் முறைமைபற்றி" யெனக் கூறிக் கிழித்து அப்பால் எறிந்தார். எல்லாப் புவனங்களையும் அவற்றிலுள்ள சராசரங்களையும் தம்முள்ளடக்கிச் சருவவல்லமையுடன் விளங்கும் பரம்பொருளாகிய வேதியர் பரம ஏழைபோலாகி, "இது முறையோ இது முறையோ" என ஓலமிட்டனர். "வேதங்கள், ஐயாவென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியரா"கிய பெருமான் இங்ஙனம் ஓலமிடுவது கண்டு அங்குள்ள பெரியோர் இருவரையும் ஒருவாறு விலக்கி "முன்னொருபோது மில்லாத நவீனமுறை கொண்டு வீண் வழக்காடும் அந்தணரே! நீர் எங்கே யிருக்கின்றவர்" கூறுமென்றார்கள். சிவபெருமானாகிய வேதியர் நாமிருக்கும் ஸ்தானம் அதிகதூரத்துள்ளதன்று; இந்தத் திருவெண்ணெய்நல்லூர்தான். அது நிற்க, இந்த நம்பியாரூரன் நியாயவிரோதமாக என்னை வலிந்து பிடித்து என்கையிலுள்ள அடிமைச்சீட்டை அபகரித்துக் கிழித்து விட்டான். அதனாலேதானெனக்கு அடிமை என்பதை உண்மைப்படுத்தினு" னென்றார். இதனைக் கேட்ட நம்பியாரூரருக்கு அதிகயோசனை உண்டாயது. தாம் மணமகனாகப் புறப்பட்டு வந்து மணப்பந்தரிலிருப்பதும், கிழ வேதியர் ஒருவர் ஒருபோதும் கண்டுங் கேட்டுமிராத நவீன முறைகொண்டு வல்வழக்கிடுதலும், அவருடைய தோற்றமும் பேசும் வாக்கியங்களும் பிறவும் நம்பியாரூரருடைய உள்ள நிலையைக் கலைத்தன. அவர் சிறிதுநேரஞ் சிந்தித்தார். இது பழைய மன்றாடியின் திருவிளையாடலாகுமென்ற எண்ணமும் அவரது உள்ளத்தில் நிகழ்ந்தது. அவர் எல்லாவற்றிலும் மிகப் பழையவராகிய அந்தணரை நோக்கி "ஐயரே, நீர் திருவெண்ணெய் நல்லூரில் இருப்பவராயின் உமது வழக்கை அங்கே தீர்த்துக்கொள்வோம்" என்றார். வேதியர் "நீ திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்றாலும் உன் பாட்டன் ஆதியில் எழுதிக் கொடுத்த மூலவோலையை அங்குக் காட்டி உன்னை அடிமைக்கொள்வேன். காலதாமதமின்றி அங்கு வருகுதி" எனக் கூறியபின் மூங்கிற்றண்டையூன்றிக்கொண்டு திருவெண்ணெய்நல்லூர்த் திசையை நோக்கி நடப்பாராயினர்.

## நாநாசமாசாரத் திரட்டு.

### பிரித்தானியர் மறுத்தனர்.

ஸ்பெயின் தேசத் தாசாங்கத்தார் பிரிட்டிஷ் கொரும் டாங்கியருக்குப் படையனுப்ப வேண டுமென்று கேட்டதற்கு பிரிட்டிஷ் அரசாங் சத்தார் இர்க்காலோசனைசெய்து முடிவில் மறுத்தனர்.

### அமெரிக்க ஆசிரியர்

அமெரிக்காவிலுள்ள பென்ஸில்வேனியா கலாசாலையொன்றில் ஆசிரியராயிருக்கும் மிஸ்டர் ஹோம்ஸ் எனபவரும் அவரது மனைவியும் இந்தியாவிலுள்ள கல்வி, மதப்பரிசு, சமூக மேன்மை முதலிய சம்பந்தமான விஷயங்களைப் பற்றி நேரில் அறியவேண்டிப் புறப்படுவாரென்றும் டிசெம்பர்மாசமத்தியில் அவர்கள் பம்பாய் சேரு வரக்கூடுமென்றும் சொல்லப்படுகிறது.

### நெப்போலியன் காலத்து மனிதன்.

நெப்போலியனை நேரிற் கண்ட மனிதன் ஒருவன் பாலஸ்தினத்தில், டிரான்ஸ்ஜோர்தினியாவில் இருக்கிறானாம். அவனுக்கு வயது 140 அவன் பெயர் ஹாஜிசாலிர் மெக்காவில் பிறந்தானாம். 13-ம் வயதில பாலஸ்தினத்தில் குடியேறினானாம். சிரியாவுக்கு நெப்போலியன் சென்றபொழுது இவன் அவனைக் கண்டானாம். இவனுக்கு இரண்டுமுறை பல்விழுந்து மூன்றாவதுமுறை முளைத் திருக்கிறதாம். அவன பலசாலியாயிருக்கிறானாம். சமீபத்தில் அவன் திரும்பவும் கலியாணஞ் செதிருக்கிறானாம்.

### அரசத் துறவிகள்.

இத்தலியிலே சிசிலித் தீவிற்பெரிய அரசகுடும்பத்தைச் சேர்ந்த பாட்டெர்னோ என்ற இளவரசரும் அவரது மனைவியும் திடீரென்று தங்கள் பெருஞ் செல்வங்களைத் துறந்து சந்நியாசிகளாய்விட்டார்கள். அவர்களுக்கு வயது நாற்பதுகூடுமே யிராது. பெரிய சுக போகத்தில் வாழ்ந்தவர்கள்; அவர்கள் தர்மத்திலும் சிறந்து விளங்கினார்கள். அவர்களுக்குப் பிள்ளையில்லை. இளவரசர் ஒருமடத்திற்சேர்ந்து சந்நியாசியாக வாழப்போகிறார். இளவரசி மற்றொரு கன்னிமாடத்திற் சேர்ந்து காலங் கழிக்கப்போகிறார். இவர்கள் துறவை நோக்கி இத்தலி நாட்டினர் அதிசயமடைந்திருக்கிறார்கள்.

### தேசோபகாரியில் ஓர் சித்திரம்.

சென்றவாரம் வெளிவந்த தேசோபகாரிப் பத்திரிகையின் மூன்றாவதுபக்கத்தில் ஓர் சித்திரம் வரையப்பட்டிருக்கிறது. அதில் ஓர் பேர்மாவாசி ஒரு ஐரோப்பியனைத் தோள்மீது சுமந்துகொண்டு நிற்கின்றனன் ஐரோப்பியன் தன்பக்கத்துள்ள ஓர் இந்தியனைச் சுட்டிக் காட்டி அவனை உதைக்கும்படி தன்னைச்சுமக்கும் பேர்மியனுக்குக் கட்டளையிடுகின்றனன். ஐரோப்பியனைச் சுமக்கமுடியாது கஷ்டத்துடன் குனிந்துநிற்கும் பேர்மியன் இந்தியனை ஒருவாறு காலால் உதைக்கின்றான். அச்சித்திரத்தின்கீழே "அதிகாரவர்க்கத்தின் சூழ்ச்சியை அறியாத பேதைப்பேர்மியன் இந்தியனை உதைத்துப் பேர்மாவைவிட்டு ஓட்டப்பார்க்கின்றான். அதற்கு இந்தியன் என்னைப்போகச் சொல்லுவது சரிதான், ஆனல் உன்முதுகின் மேல் சவாரி செய்பவன் யாரென்று சற்று யோசித்துப்பார்', என்று எழுதப்பட்டிருக்கிறது.

### விபரீத யோசனை.

பிரான்சு தனது ஜனத்தொகையை அதிகப்படுத்தமாது பெரிய வேலைகள் செய்தாலன்றி இன்னும் இருபது வருஷத்திற்குள் பிரான்சு சாதியே அழிந்துபோய்விடுமென்று டாக்டர் பால் காரெட் கூறுகிறார், பிரான்சில் இருபது லக்ஷம் மாதர்கள் கலியாணமின்றி யிருக்கிறார்களாம். சென்றுபோன மகாயுத்தத்தில் ஆண்கள் இறந்துபோனதால், இவர்களுக்குப் புருஷர்கள் இல்லையாம். ஐரோப்பாக்கண்டம் முழுமையும் ஆண்களைவிட ஒன்றரைக்கோடி பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். பிரான்சுப் பெண்களை அந்நியர்களுக்குக் கொடுக்கக்கூடாதாம். புருஷர்களை ஒன்றுக்கு அதிகமான மனைவிகளை வைத்துக்கொள்ளும்படி விடவும் வழியில்லையாம் ஆனல் கலியாணமென்பதின்றி, ஸ்திரீகள் பல புருஷர்களுடன் கூடிப் பிள்ளைகளை பெற்று வரும்படி விட்டு விட வேண்டுமாம். பிள்ளைகளுடன் வாழுந் தாய்மார்களுக்கு அரசாங்கத்தார் பிள்ளைகளின் எண்ணிக்கைக் கேற்றவாறு, ஆதரவுதிக்கவேண்டுமாம். இது சார் நாட்டின் யோசனை.

### ஒருமன்னரின் கருணை.

சென்றமாதத்தில் லண்டனில் காலஞ்சென்ற குவாலியர் மகாராஜா ஏழைகளிடம் மிகுந்த இரக்கமுடையவராம். அவர் லண்டனில் சமாதானக் கொண்டாட்ட சமயத்தில் ஹைட் பார்க்கில் வேடிக்கைபார்க்கச் சென்றபொழுது ஒரு தொழிலாளியையும் அவன் மனைவியையும் கண்டார். தொழிலாளி தனது குழந்தையைத் தூக்கிக்கொண்டு போனான். அவர்கள் மிகவுங் களைப்படைந்திருந்தார்கள். மகாராசா சிறிது நேரம் குழந்தையைத் தூக்கிக்கொள்வதாகச் சென்றார். தொழிலாளி சிறிது தயங்கிய போதிலும் குழந்தையை அவரிடம் கொடுத்துவிட்டான். மகாராசாவின் ஆட்கள் போய்விட்டார்கள். மகாராசா வாணவேடிக்கை முடியும் வரையும் இருந்தார். வீடு திரும்புமபொழுதும் குழந்தையை அவர் அதிகநேரந் தூக்கிக்கொண்டு வந்தார். மகாராசா தனது மாளிகைக் கருகே வந்தவுடன் அவர் வீட்டிற்குப் போவதாகச் சொன்னார். தொழிலாளி அவர் அவ்வளவு பெரிய வீட்டிற்குப் போவதுபற்றிச் சந்தேகப்பட்டான். உடனே மகாராசா தான் அச்சேகுதிமாளாயத்தில்தான் வேலைசெய்கிறேன் என்று சொன்னார். உடனே தொழிலாளி நீர் எங்கள் இங்கிலிஷ் ஆட்களைப்போலில்லை. நீர் மிகவும் நல்ல மனிதன் என்று சொன்னான்.

## கடிதம்.

### அல்வாய் முத்துமாரியம்மை கோயில்.

முத்துமாரியம்மை யாலயம் அல்வாயின் மத்தியபகுதியில் "வேவிலந்தை" யென்னுங் காணிக்குட்டிகழ்கின்றது. இந்த கோயில் கொண்டருளும் உலகமாதாவின் அனுக்கிரகம் எத்திக்கிளாராலுங் கொண்டாடப்படுகிறது. இவ்வாறு விசேஷமூர்த்திகாமுள்ள கோயிலின் கட்டடமோ மிகவும் சேவலமானநிலையிலிருக்கிறது. சுவர்கள் கால்க்கண்டமையால் வெடித்துப்போய்விட்டன, திராந்திகள் வைரங்குறைந்த பனைமரங்களினலானமையால் முறிந்து குறைபிற்றங்குகின்றன. நித்திய பூசையும் நாடோறுமின்றிரு இரண்டுகாலங்கட்கு மாத்திரம் நடந்துவருகிறது. உற்சவாதிகளங்கட்கு அவசியம்வேண்டப்படும் உபகரணங்களும் கோயிலுக்குச்சொந்தமாயில்லை. இப்படியெல்லாமிருக்கவுங், திருவிழா நாட்களில் நடக்கும் விண்டம்பங்களோவென்றுற் கேட்கத் தலைவிறைக்கும். ஒவ்வொருவருடமும் ஆடி அமாவாசி யாதியாகப் பதினைந்து நாட்களுக்கு (அலங்காரத்) திருவிழா நடக்கும். இவைகளுள் ஒன்பதின்மேற்பட்ட நாட்களும் தாசிகளை நடனத்தின்பொருட்டு அழைப்பர். அவர்கள் வருந்திருவிழாக்களுக்கு நடக்கும் ஏனைய டம்பங்கள் சொல்லாமலே விளங்கும். இவர்கள் வருந்திருவிழா நாட்களிற் பூசைகாலத்துக்கு நடப்பதில்லை பகல் விழாப் பொழுது படுநோத்தும் இராவிழாமறுநாள் விடிந்தபின்னுமே முற்றும். இவ்விதகாலதாமசத்திற்கு முக்கிய காரணர் இத்தாசிகளே. இவர்களுக்குத் திருவிழாக்காரர் நடந்துகொள்ளு நடப்பைப்பற்றி எழுதவில் 'உலகம் பலவிதம்' மெனுந் தலைப்பின்கீழ்ச் சேர்க்கவேண்டுமேயா மென்னுமிக்குறிப்பினுலுணர்த்தநின்றும்.

இனி, இத்தாசிகள் வருந்திருவிழாவிற்கு வந்துசேரும் மட்டிக் குழாங்கள் ஆலயத்தை ஓர் விளையாட்டிடத்தினுங் கேவலமானதென மதித்துச் சீர்கெடுத்துவிடுகின்றனர். அவர்கள் தங்களுட் செய்யும் சேட்டைவார்த்தையாதியாந் துர்க்கிருத்தியங்கட்கு முக்கியகாரணமித்தாசிகளின் நவீன உடை நடை பாவனைகளே. இப்படியெல்லாமிருப்பவும் குளிக்கப்போய்ச் சேறு பூசுவாரை மானத்திருவிழா உபயக்காரர் தாசிகளைக் கைவிடுகிறார்களில்லை. இவர்கள் மதியிருந்தவாறென்னே! இவர்களுட் பெரும்பாலார் அதிக கஷ்டப்பட்டுழைத்துத் திருவிழாச் செலவிறுக்கிறவர்கள். இவர்கள பணம் இவ்வாறு அழிவெய்தும் விதிதானென்னே!

அறிவின்மிக்க பெரியோரே! சற்றுயோசியுங்கள்! யாழ்ப்பாணத்தி லனேகவிடங்களில் அறிஞர் இதை வீணெனவிலக்கித் தொடங்கிச் சிறப்பாகவும் முறைப்படியும் திருவிழாச்செய்வதைப்பாருங்கள். (அவர்களைப் பின்பற்றி இத்தாசிகளுக்கு நீங்கள் வேர்வைசிந்த உழைத்தபணத்தைக் கொடாதிருங்கள். இவர்களை நீக்கிச் செய்யுந் திருவிழாத்தான் தேவிக்குப் பிரியமானதாகும். இவ்வருடம், ஐந்தாந்திருவிழா உபயக்காரருள் சில அறிஞருக்கு இத்தாசிகளை நீக்கும் நல்லெண்ணம் குடிகொண்டிருக்கிறதெனவறிய அதிக சந்தோஷமாயிருக்கிறது. எல்லாம்வல்ல வெம்பிகைதவி கிருபை முன்னிற்பதாக.

இங்ஙனம்,
ஓர் அல்வாய்வாசி.

[நமது கடித அபிமானி கூறுவன உண்மையானல் குறித்த ஆலயத்தில் உற்சவம் நடத்தும் உபயக்காரர் செயலைபிட்டுயாம் பெரிதும் அனுதாபப்படுதல் வேண்டும். ஆலயம் சிலமடைந்திருப்ப அலங்கார உற்சவம் நடத்துவது உட்சுவர் இருக்கப் புறச்சுவர் பூசுவதுபோலாகும். இந்தவருடத்திலும் அடுத்த வருடத்திலும் வரவிருக்கும் தீமைகளை மெய்யன்போடுகூடிய ஆலயவழிபாட்டினுலும்திருப்பணித்திருத தொண்டுமுற்றுவித்துநித்தியநைமித்திகங்கள்குறைவறநடைபெறச்செய்வதினாலுமே நீக்கலாகுமென்பது பெரியோர்கொள்கை. இதனையுணர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள சைவ அபிமானிகள இப்பொழுது தாங்தாம் குடியிருக்கும் கிராமத்திற்குரிய ஆலயங்களிற் செய்யவேண்டிய திருப்பணிகளை முற்றுவித்து நித்தியநைமித்திகங்கள் சிறப்பாக நடைபெறத்தக்க ஒழுங்குகளைச் செய்துவருகின்றார்கள். கடிதமெழுதிய அபிமானிமுத்துமாரியம்மன்கோவிலில் இரண்டுகாலப்பூசை மாத்திரம் நடக்கின்றதெனச் சொல்லுகின்றார். இரண்டுகாலப் பூசையும் விதிப்படி கிரமமாக நடந்து வருமேல் அதனல் யாதும் குறையில்லையாம். தாசிகளை அழைக்கும் விஷயமாகச் சொல்லுகில் அவர்களை அழைப்பதினுற் கலகங்களும் மற்றுந் தீமைகளும் விளைகின்றன வென்பதை அறிவுடையோர் அனுபவத்திற்கண்டு அங்ஙனஞ் செய்தலை விடுத்து, உற்சவ காலங்களில் சச்சிதாநந்த ராஜயோகிகளைப் போன்ற மகான்களைக் கொண்டு சற்பிரசங்கஞ் செய்வித்து நன்மையடைந்து வருகின்றார்கள். அல்வாயில்வசிக்கும் அன்பர்கள இவற்றையெல்லாஞ் சிந்திப்பார்களாக. பத்திராசிரியர்.]

### பூர்வீகக் கல்விமுறை.

பண்டைக்காலத்திற் கற்றுவல்ல சிரேஷ்டராய் வசித்த நம்முன்னோர், தமது வாழ்க்கைப் பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற சதுராச்சிரமங்களுளடக்கி அவற்றிற் கியைய வொழுகிவந்தன ரென்பது, அவர் செய்தளைத்துப்போன நூல்களாலும் பிறவற்றாலுந் தெளிந்தவுண்மை. இவற்றுட் பிரமச்சரியமென்பது ஒருவன் ஆசிரியன்பால் அமைவுடனிருந்தறமுதலாற் பொருளுமையமறவோதியுணரும் நிலைமையும், கிருகஸ்தம் மனைத் தக்கமாண்புடையாளை மனையாளாகக்கொண்டு நல்லொழுக்கநெறிநின்று அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல் துறவோர்க்கெதிர்தல் ஆகிய நல்லறங்களையியற்றி இனிதுவாழும் நிலையையும், வானப்பிரஸ்தம் இல்லாளைத்துறந்திடைவிடாது ஈஸ்வரத்தியானஞ் செய்தின்புற்றிருக்கும் நிலைமையும், சந்நியாசம் உலகப்பொருள்களின் நிலையாமைகண்டு, பிறப்பால் வருவது துன்பமேயென்றும், பிறவாமையாகிய பேறே பெரும்பேறெனவுங்கொண்டிருவகைப்பற்றையுமறவே யொழித்து மறுமைப்பயன் கருதித் தவஞ் செய்யும் விழுமிய நெறியையுங் குறிக்கும்.

கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய மூன்று நிலைகளினுஞ் செவ்வனே சென்றொழுகுதற்குக் கல்வியறிவின்றியமையாதாகலினும், அவ்வறிவை யிலகுவிற் பெறற்குப் பிரமசரியமே திருத்தமும் பொருத்தமுமாகலானும் அந்நிலையேனைய ஆச்சிரமங்கட்கோரஸ்திபாரம் போன்றிருக்கின்றது.

பிரசரியம் என்பது தேவவழிபாட்டினிற்றலென்னும் பொருளுடைத்து. அஃது ஒருவன் ஏழுவயசுமுதல் 16, 33, 43 வயசுவரையனுஷ்டிக்கப்படலா மென்னும் நியமமுற்றிருக்கது அதன்படி „குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை„, என்றற்றொடக்கத்து ஆசிரியர் பவணந்தியார் கூறிய விலக்கணத்திற் கிலக்கியமாயமைந்துள்ள வானப்பிரஸ்த குருவிடம் வந்தனுபசார நிழலைப் போன்றாசிரியனண்டையமைவுட னிருந்தவர்க்கு வேண்டுவன குறிப்பறிந்தாற்றி யற்றநோக்கி யறமுதலாற் பொருளுமைய மகல வார்வமுடனோதி யுணர்வரெனக.

குருவினது ஆச்சிரமத்தில் சிஷ்யர்கள் குழுமிக் கலைபயில்வது குருகுல வாசமென்னும் பெயரானதியப்பட்டு வந்தது. அக்குருகுலம் மனுஷ சஞ்சார மற்றதாய் வண்டிரைந்து தேனார்ந்து வரிக்குயில்களிசை பாடத் தண்டென்றல் தவழ்ந்துலவுந் தண்ணரும் பொழிலின் நடுவே யமைந்திருக்கும். அதன் பாங்கரிலவர்வழி படு தெய்வங்களின் கோவிலு மமைந்திருக்கும்.

மாணவரிரவியுதித்தற் கைந்து நாழிகையின் முன்னர்த் துயில் நீத்து அவசியகருமம் ஸ்நானம் செபம் தியானம் முதலாயநித்திய கருமங்களை முடித்துக்கொண்டு குரு, கடவுள் வழிபாடு முடித்தற்பொருட்டுத் தத்தமக் கேற்பட்டுள்ள அலகிடல் பூப்பறித்தல் முதலாந்திருத்தொண்டுகளைச் செய்யாநிற்பர் இவ்வாறு தம் திருத்தொண்டுகளை நிறைவேற்றியதும் குருவோடாலயம் புக்கங்கு செயற்பாலனவாய திருப்பணிகளைச் செய்து நிறைவேற்றுவர். இஃதவர்களின் காலைத்தேவதாவழிபாடாகும்.

பின்னர் காலமுமிடனும் வாய்த்திடுக்கிச் சிறந்துழி யிருக்குந்தம் குருவையடைந்து வழிபாடு செய்தவர் குறிப்பின்படியிருந் தரும் பெரும் பொருள்களைப் பன்முறைகேட்டுப் பயனுறவோதியுந்தரவோடவணின்று பிரிவர் பிரிந்து தாம் குருவிடங்கேட்டன மனத்தில் அழுந்துமாறொருவர்க் கொருவர் வினவியும் வினவிய வினாக்களுக்கு விடையிறுத்துந் தந் தொழிலைத் தளர்வின்றிச் செய்வர். இப்படியிருக்கையில் மத்தியான காலமும் வந்துவிடும். வரவேமாணவர்கம் பிட்சா பாத்திரத்துடன் அண்மைக்கணுள்ளவூர்புக்காங்கு பார்ப்பனவீடுகடோறுஞ் சென்று வாய்பேசாது மௌனஞ் சாதித்து நின்று அன்னார் விரைவொடுவந்து மகிழ்வொடளிக்கு மறுசுவை யுண்டி பெற்று மீட்டு மாசிரியனை தன்னை யன்புடன்சேர்வர். சேர்ந்துமுதற்கட் குருவையுண்பித்துச் சேஷான்னத்தைத் தாமுண்டு பின்னரும் பாடங்கேட்டற் பொருட்டு குருவயிற்செல்வர். சென்று கற்று மாலைக்காலம் வந்ததும் குருவனுமதிபடி யவணின்று நீங்கி மாலைச் சந்தியாவந்தனஞ் செய்வர் இதன் பின்னர்த்தம் பாடங்களை மீட்டுச் சிந்தித்துக்கொண்டு குறித்தநேரம் வந்ததும் பாயின்றிப்படுத்துறங்குவர். உறங்குவோர் சூரியனுதித்தற் கைந்து நாழிகையின் முன்னர்த் துயில்நீத்து வழக்கப்படியேதம்கடமைகளை நிறைவேற்றிவருவர்.

இவர்கள் மனத்தூய்மையுடையோராகவும் வழிபாட்டிற்கன்றிமற்றெக் காரணம்பற்றியேனும் சந்தனம், புஷ்பம், சொர்ணம் முதலாம் மங்கலப் பொருள்களைத் தீண்டக்கூடாதென்னுங் கட்டுப்பாடுடையோராகவும் வாழ்ந்தனர். மேலும் நாடகம் பார்த்தலும் சிருங்காரச் சுவை பயக்குஞ் செய்யுட்களை ஓதுதலுமிலராய்ச் சமயஞான சாஸ்திரக்காற்றிலுலாவிச் சகல சாஸ்திரக் கல்வியையும் பயின்றனர். மாணவர் உத்தியமான்றல் கூடாதென விலக்கப்பட்டிருந்தனர், பெண்களை யிச்சித்தல் பெரும் பாதகமெனத் தடுக்கப்பட்டிருந்தனர். இவர்கள் ஓதும் நூல்களின் தாரதம்மியம் நோக்கி வகுப்பொழுங் கேற்படுத்தப்பட்டிருந்தது.

மாணவர் தாம் கலைபயில்காலத்து, தம் குரு ஞானத்திற் குறைவுற்றிருக்கின்றா ரென்பதை யறியின் வண்டுகள் மதுவற்ற மலரை நீத்து மதுவுள்ள மலரை நாடி யறியுமாறவரைத் துறந்து ஞானம் முற்றப்பெற்ற நல்லாசிரியரை யடைவர்.

குருகுலவாசஞ்செய்யும் மாணவன் விவாகஞ் செய்யக் கருத்துக்கொண்டால் அதனைத் தன் குருவுக் கறிவித்து அவரனுமதி பெற்று வீடடைந்து உற்றார் பெற்றார் முதலானோரிடம் பொருள்பெற்றுத் தந்தையொடு குருகுலம் புக்குத் தான் கொண்டுவந்த பொருள்களைக் குருவுக்குத் தட்சணையாகக் கொடுத்து அவரைக்கொண்டாங்கு சமாவர்த்தனமென்னுங் கிரியையை முடிப்பித்து அவர் கூறுஞ் சற்புத்தி கேட்டுத் தோழர்க்கு நன்றிகூறி வீடடைந்து அடுத்தநாள் உருவுந்திருவுங் குலமுங் குணமும் அறிவு மனபு மொத்த ஓர் கன்னிகையை இல்லக்கிழத்தியாகக்கொண்டு இல்லறத்தையினிது நடாத்தி இன்புற்று வாழ்ந்துவருவான்.

இங்ஙனம்,
செ. பூபாலபிள்ளை,
கோப்பாய் ஆசிரியகலாசாலை.

## அநுவாதம்.

### சரீர ஆரோக்கியத்தை எப்படிப் பாதுகாப்பது?

சரீர ஆரோக்கியமானது மனிதருக்கு ஓர் மேன்மையான செல்வமாகும். ஒருவனுக்கு எவ்வளவு பணமிருந்தபோதிலும், டாம்பீகங்கள் இருந்தபோதிலும் சரீர ஆரோக்கியமில்லாவிடில் அவைகளை அவன் அனுபவிக்க முடியாது. ஆகையினுல் தான் "ஆரோக்கியமே தனம்" என்ற ஓர் பழமொழியும் வழங்கி வருகின்றது. சரீர ஆரோக்கிய மில்லாதவர்களுக்கு எப்பொழுதும் தென்பென்பதே கிடையாது ஆகையினுல் மனிதனுடைய முதற்கடமை சரீர ஆரோக்கியத்தைப் பெற்று அதைப் பாதுகாப்பதேயாகும். ஆரோக்கிய விதிகளை ஜாக்கிரதையாய்க் கவனித்து அவைகளின்படி நடந்துகொள்வோமானுல் தான் சரீர ஆரோக்கியத்தை நாம் உடைத்தாயிருக்கலாம். அவைகளுள் சிலவையாவன:—

(1) காலையில் படுக்கையைவிட்டு எழுவதுடன் சீக்கிரம் படுக்கைக்குச் செல்லுதல்.

(2) சுத்தமாயிருத்தல்.

(3) ஆகாரங்களும் பானமும்.

(4) வேலை.

(5) வியாயாமம்.

மேற்கூறிய விதிகளை அநுசரிப்பதென்றுல் அது சுலபமான காரியமல்ல. அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். முயற்சி யில்லாமல் ஒருக்காலும் பலன் கிடைக்காது. மனிதர்கள் இவ்விதிகளை பழக்கத்தில் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்வது முதலில் சிறிது கஷ்டமாகத்தானிருக்கும்.

1. அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருந்து, இரவில் சீக்கிரம் படுக்கைக்குச் செல்வது ஒரு மனிதனை ஆரோக்கிய சரீரியாகவும், தனவானுகவும், புத்திசாலியாகவும் செய்கிறது. பண்டைக்காலத்திலிருந்து அதிகாலையில் எழுந்திருப்பதைப் புகழ்ந்து பேசப்பட்டிருக்கின்றது. சூரியோதயத்திற்கு ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம் முன் எழுந்திருக்காவிடினும் சூரியன் உதயமாவதற்குச் சற்று முன்னுகிலும் எழுந்திருக்க வேண்டும். ஒரு மனிதன் சாதாரணமாய் 7 மணி நேரத்திற்கு மேல் நித்திரை செய்யலாகாது. பகலில் நித்திரை செய்வது தேகத்திற்குக் கெடுதியையே விளைவிக்கும். அப்படிச் செய்வதினுல் சோம்பேறித்தனம் அதிகரிக்கிறது. நேரம் கழித்து எழுந்திருப்பதினுலும் சோம்பேறித்தனம் உண்டாகிறது. ஆகையால் மனிதர்கள் படுக்கைக்குச் செல்லவும், படுக்கையை விட்டு எழவும் ஓர் குறித்த நேரத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

2. சுத்தம்:— நம்முடைய சரீரத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டுமானுல் நம் தேகத்தில் அழுக்குச் சேரவொட்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதைச் செய்ய ஸ்நானம் மாத்திரம்தான் தேவையென்று நினைப்பது தவறு. உணர்ச்சி நரம்புகளையுடைய காதுகள், வாய், மூக்கு முதலிய உறுப்புகளையும் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டியது அத்தியாவசியம். காலையில் ஸ்நானம் செய்வது ஓர் முக்கிய வழியாகும். ஸ்நானம் செய்வதின் நோக்கம் என்னவென்றுல் நமது சர்மத் துவாரங்களை அடைத்துக் கொண்டிருக்கும் அழுக்கை நீக்குவதற்காகத்தான். இப்படிச் செய்தால் வியர்வை உடம்பில் சேராமலும், சர்மம் மழ மழப்பாகவும் இருக்கும்.

3. ஸ்நானத்திற்குக் குளிர்ந்த ஜலத்தை உபயோகிப்பதா அல்லது வெந்நீரை உபயோகிப்பதா என்பது அவரவர்களுடைய வழக்கத்தைப் பொறுத்ததாகும். ஓடும் நீர்க்காலில்

காலையில் ஸ்நானம் செய்வது எல்லாவற்றையும்விடச் சிரேஷ்டமானது. ஸ்நானம் செய்யும்போது வாயையும் பற்களையும் சுத்தம் செய்துகொள்வது அத்தியாவசியமாகும். ஒவ்வொரு போஜனத்திற்கும் பின் நம்முடைய பற்களில் அசுத்தங்கள் சேரவொட்டாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் அதேமாதிரி நம்முடைய ஆடைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

தலைமயிரை அஜாக்கிரதையாய்வாரிக்கொள்ளாமல் விட்டுவைத்திருக்கக்கூடாது. அஜாக்கிரதையாய் இருப்போமானால் பேன் விருத்தியாவதுடன் அநேக தொற்றுவியாதிகளும் உண்டாகும். தலைமயிரை அலசுவது மாத்திரம் போதுமானதல்ல. அழுக்கெல்லாம் நன்றாய்ப் போய்விடும்படி தேய்த்து ஸ்நானஞ் செய்யவேண்டும்.

4. ஆகாரம்:—சிறுவர்களின் தேகநிலைக் கட்டுமஸ்தாய் வைத்திருக்கவும், வயதானவர்களுடைய பலஹீனமடைந்ததசைகளைப் பூர்வஸ்திதிக்குக் கொண்டுவரவும் இது ஒத்தாசையாயிருக்கிறது. அதற்கு ஆகாரமானது ஆரோக்கியத்திற்கனுகூலமானதாகவும், நன்றாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். பலவித உணவுகளைப்புசிப்பதானது அநுகூலத்தை விளைவிக்குமே தவிர பிரதிகூலத்தை விளைவிக்காது. ஏனெனில் ஒவ்வோர் உணவும் ஆரோக்கியத்தைக்கொடுக்கத்தகுந்ததாகவும். ஊட்டத்தைக் கொடுக்கத் தகுந்ததாகவும் இருக்கின்றது. ஆகாரத்தை விழுங்குவதற்குமுன் நன்றாய்க் கடிக்கவேண்டும். இப்படிச் செய்வதினால் ஜீரணத்திற்கு உதவியாயிருக்கிறது ஒவ்வொருவருடைய சௌகர்யத்தின்படி குறித்த நேரங்களிலேயே ஆகாரத்தைச் சாப்பிடவேண்டும். பானமருந்தும் விஷயத்திலும் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இக்காலத்தில் வழங்கிவரும் காப்பி, தேத்தண்ணீர், கொக்கோ முதலிய பானங்களை ஒருபோதும் அருந்தலாகாது. அவைகள் ஜீரணத்தைக் கெடுப்பதினாலும், தூக்கத்தைக் கெடுப்பதினாலும், நரம்புகளுக்குச் சோர்வையுண்டுபண்ணுவதினாலும் அவைகளை உபயோகிக்கலாகாது ஆகாரத்திலும், பானத்திலும் மிதமாயிருத்தல் வேண்டும். மிதமென்றால் எதையும் அளவிற்கு மிஞ்சிப் புசிக்காமலிருத்தல் என்பதுபொருள். எல்லாவற்றையும் ஒழுங்காயும், கணக்குப்படியும் செய்யவேண்டும.

